**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**C.O.S. No.2/2023**

**பிரதிவாதி தரப்பு சாட்சி : 2**

பெயர் : **திருமதி. முத்துலட்சுமி**

தகப்பனார் / கணவர் பெயர் :

தொழில் :

கிராமம் :

தாலுகா :

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை திரு.ஸ்வர்ணம் ஜே.நடராஜன்.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, திருப்பூர் அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை.**

நான் இந்த வழக்கின் 3 பிரதிவாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் 7 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1. 07.02.2003 தேதியிட்ட "ஸ்ரீ ஸ்ரீனிவாசா டெக்ஸ்டைல்ஸ்" நிறுவனத்தின் பங்குதாரர் பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.12,

2. 26.02.2003 தேதியிட்ட "ஸ்ரீ ஸ்ரீனிவாசா டெக்ஸ்டைல்ஸ்" நிறுவனத்தின் பங்குதாரர்கள் கிரையப்பத்திரம் எண்.776/2003 அசல் பி.வா.சா.ஆ.13,

3. 26.03.2012 தேதியிட்ட "ஸ்ரீ ஸ்ரீனிவாசா டெக்ஸ்டைல்ஸ்" நிறுவனத்திலிருந்து S.பாலகிருஷ்ணன் விலகியதற்கான விடுதலைப்பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.14,

4. 27.12.2013 தேதியிட்ட "ஸ்ரீ ஸ்ரீனிவாசா டெக்ஸ்டைல்ஸ்" நிறுவனத்தின் பங்குதாரர் மறுசீரமைப்பு பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.15,

5. 30.12.2013 தேதியிட்ட "ஸ்ரீ ஸ்ரீனிவாசா டெக்ஸ்டைல்ஸ்" நிறுவனத்திலிருந்து P.ரத்தினசாமி மற்றும் P.சிவக்குமார் ஆகியோர்கள் விலகியதற்கான விடுதலைப்பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.16,

6. 18.01.2014 தேதியிட்ட "ஸ்ரீ ஸ்ரீனிவாசா டெக்ஸ்டைல்ஸ்" நிறுவனத்தின் 01.10.2013 முதல் 31.12.2013 வரை மற்றும் 01.03.2014 முதல் 31.03.2014 வரையிலான UCO வங்கி வரவு செலவு கணக்குப்பட்டியல் கணினி நகல் பி.வா.சா.ஆ.17,

7. 04.03.2016 தேதியிட்ட "ஸ்ரீ ஸ்ரீனிவாசா டெக்ஸ்டைல்ஸ்" நிறுவனத்தின் Form–A நகல் பி.வா.சா.ஆ.18.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2023.10.06 19:15:13 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.